விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–03.51 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –04.16 p.m.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : C.C. 349/2023

**Prosecution witness : அ.சா.2** **Date : 03.09.2024**

| | |
|---|---|
| **Name: பத்ரன்** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name : –** | **Calling : வனக்காப்பாளர்** |
| **Village : கருங்கல்லூர்** | **Age : 54** |

**(Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டூர் வனசரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 24.07.2022–ம் தேதி காலை 4.30 மணியளவில் மேட்டூர் வனச்சரகம் உள்ளூர் தண்டா தெற்கு பிரிவு கொளத்தூர் பீட் எல்லைக்குட்பட்ட ஆலமரத்துப்பட்டி கூல்கரடு பகுதியில் புஷ்பநாதன் த.பெ. தோமஸ் என்பவருக்கு சொந்தமான பட்டா நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த பருத்தி காட்டிற்குள் சட்டத்திற்கு புறம்பாக மின்வேலி அமைத்து மின்சாரம் பாய்ச்சி ஆண் காட்டு யானை இறந்துகிடப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நானும், உள்ளூர் தண்டா தெற்கு பிரிவு வனவர் திரு.ரகுநாதன் என்பவரும், வனகாவலர் சக்திவேல் ஆகியோருடன் சம்பவயிடம் சென்று பார்த்த போது சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஆண் காட்டு யானை ஒன்று அந்த இடத்தில் இறந்துகிடந்தது. விசாரித்தபோது யானை இறந்த இடத்திலிருந்து சுமார் 150 மீட்டர் தொலைவு உள்ள ஈரோடு வனக்கோட்டம், சென்னப்பட்டி வனச்சரகம், குரும்பனூர் தெற்கு பீட் வடபர்கூர் காப்பு காட்டில் இருந்து தண்ணீர் மற்றும் உணவு தேடி வெளியே வந்த ஆண் காட்டு யானை எதிரி புஷ்பநாதன் த.பெ. தோமஸ் விவசாய நிலத்தில் பயிர் செய்துள்ள பருத்தி செடிகளை சாப்பிடுவதற்காக வந்த ஆண் காட்டு யானை

ஒன்று விவசாய நிலத்தினுள் கட்டி வைக்கப்பட்டிருந்த இரும்பு கட்டு கம்பியில் மின்சாரம் தாக்கி சம்பவயிடத்திலேயே உயிர் இழந்து இறந்துகிடந்தது என்பதனை தனியறிக்கை மூலமாக மேட்டுர் வனச்சரகர் அவர்களுக்கு தெரிவித்தேன். தனியறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(தனியறிக்கையில் உள்ள கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் வனச்சரகர் அவர்கள் சேலம் மண்டல வனப்பாதுகாவலர், சேலம் வனக்கோட்ட மாவட்ட வனஅலுவலர், உதவி வனப்பாதுகாவலர், சேலம் மற்றும் ஓசூர் அரசு கால்நடை உதவி மருத்துவர், செட்டியூர் அரசு கால்நடை உதவி மருத்துவர், ஆலமரத்துப்பட்டி கிராம நிர்வாக அலுவலர், கொளத்தூர் மின் உற்பத்தி பொறியாளர் ஆகியோர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவயிடத்தில் மின்சாரம் பாய்ச்சி யானை இறப்பிற்கு பயன்படுத்தப்பட்ட மரக்குச்சிகள் (2– எண்ணிக்கை), இரும்பு கட்டு கம்பி சுருள்கள் – 1 கட்டு, யானை தந்தங்கள் – 2 அவற்றின் சுற்றளவு, நீளம், ஆகியவை H நமூனாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. H நமூனா என்னால் தயார் செய்யப்பட்டது. **(H நமூனா அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தடயச்சொத்துக்களை கைப்பற்றி சிவப்பு பெயிண்டினால் வரிசை எண் கொடுக்கப்பட்டது. இறந்த யானையானது அட்டவணை –1 பகுதி –1–ன்படி பாதுக்காக்கப்பட வேண்டிய விலங்கினமாகும். எதிரி குற்றம் இழைத்ததால் அவரை வனச்சரகர் திரு.அறிவழகன் கைது செய்தார். பின்பு ராமன்பட்டி பீட் வனக்காப்பாளர் திரு.குழந்தைவேல் என்பவர் முன்னிலையில் எதிரி எவ்வித வற்புறத்தலும் இன்றி தானாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நான் சாட்சி கையெழுத்து செய்தேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள மூன்றாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **(எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள மூன்றாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) அன்றைய தினம் மாலை 6.30 மணியளவில் உள்ளூர் தண்டா தெற்கு பிரிவு வனவர் திரு.ரகுநாதன் ஸ்தல மகஜர் தயார் செய்தார். கால்நடை மருத்துவர் வரவழைக்கப்பட்ட சம்பவயிடத்திலேயே யானையை நீதிமன்ற உத்தரவுடன் உடற்கூராய்வு செய்து புகைப்படம் மற்றும் சிடி ஆகியவற்றின் மூலம் பதிவு செய்து சம்பவயிடத்திலேயே குழி தோண்டி புதைக்கப்பட்டது. மின்சார துறையிலிருந்து செயற்பொறியாளர் சம்பவயிடத்திற்கு வந்து பார்வையிட்டார். இறந்துபோன யானையின் இடது மற்றும் வலது தந்தத்தை பிடிப்பொருள் பட்டியலில் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு எதிரியை மேட்டூர் வனச்சரகம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தோம். பிடிப்பொருள் பட்டியலையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டோம். ஆஜர் எதிரி தான் அவருடைய தோட்டத்தில் மின்சாரத்தை பாய்ச்சி யானையை கொன்றவர் ஆவார். இது சம்மந்தமாக வனச்சரகர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/−அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**